SHANMUGAM IAS ACADEMY

# தமிழ்ச் சமூக வரலாறு

## முந்தைய ஆண்டு வினாக்கள் (2020 – 2026)

TNPSC குரூப் 1, 2, 4 மற்றும் பிற தேர்வுகள் · விடைகள் மற்றும் விளக்கங்களுடன்

**81 வினாக்கள்**

www.shanmugamiasacademy.in

ஒவ்வொரு வினாவின் தொடக்கத்திலும் [ ] அடைப்பில் தேர்வுப் பெயரும் ஆண்டும் கொடுக்கப்பட்டுள்ளன. முதலில் விடைகளைப் பார்க்காமல் முயன்று, பின் பகுதியில் உள்ள விடைகளுடன் சரிபார்க்கவும்.

## வினாக்கள்

**1.** VAS-AHGS-2020 **கீழ்வருவனவற்றுள் தெற்கு ஆசியாவின் மிக உயர்ந்த கோபுரம் என அழைக்கப்படும் ஒன்று எது?**

**(A)** மீனாட்சி அம்மன் கோயில் கோபுரம்
**(B)** ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் கோபுரம்
**(C)** அருள்மிகு அரங்கநாதர் கோயில் கோபுரம்
**(D)** நெல்லையப்பர் கோயில் கோபுரம்

**2.** VAS-AHGS-2020 **கீழ்வரும் அவைகளில் சங்க கால மன்னர்களுக்கு உதவியவைகள் யாவை?**

**(A)** சபா மற்றும் சமிதி
**(B)** ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயம்
**(C)** அஷ்டதிக்கஜங்கள் மற்றும் அஷ்டப்பிரதான்
**(D)** ஊர் மற்றும் மன்றம்

**3.** ARGS-2020 **முகமது பின் துக்ளக் காலத்தில் தமிழகத்தின் நிலையைப் பற்றி எழுதிய மூரிஷ் பயணி ______ ஆவார்.**

**(A)** இபன் பதூதா
**(B)** மார்க்கோ போலோ
**(C)** தாலமி
**(D)** லிவி

**4.** PTGS-2021 **சங்ககால மக்களின் மணமுறைகளைக் குறிப்பிடும் நூல் எது?**

**(A)** புறநானூறு
**(B)** நற்றிணை
**(C)** அகநானூறு
**(D)** குறுந்தொகை

**5.** AHGS-2021 **தமிழ் மரபில் நிலம் ஐந்து பெரும் பிரிவுகளாக வழங்கப்படுகிறது. பொருத்துக:**
**(a) குறிஞ்சி – 1. வளமான பகுதி**
**(b) முல்லை – 2. காட்டுப் பகுதி**
**(c) மருதம் – 3. கடல் பகுதி**
**(d) நெய்தல் – 4. மலைப் பகுதி**

**(A)** 3 2 1 4
**(B)** 1 3 2 4
**(C)** 3 1 4 2
**(D)** 4 2 1 3

**6.** ADGS-2021 **பின்வரும் கூற்றுகளை ஆராய்க:**
**A: எட்டாவது உலகத் தமிழ் மாநாடு 1995-ல் தஞ்சாவூரில் நடைபெற்றது.**
**B: இந்த மாநாடு உலகச் செம்மொழித் தமிழ் மாநாடு என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது.**

**(A)** A, B இரண்டும் சரி
**(B)** A, B இரண்டும் தவறு
**(C)** A சரி, B தவறு
**(D)** A தவறு, B சரி

**7.** PSHY-2022 **சங்க காலத்தில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் இறந்த உடன் அவனுடைய மனைவி கோப்பெருந்தேவி உடனடியாக இறந்த சம்பவத்தை _______ என அழைத்தனர்.**

(A) மறக் கற்பு
(B) கற்பு
(C) சதி
(D) அறக் கற்பு

**8.** VCGS-2022 **சங்க காலத்தில் தங்கத்தினை மதிப்பிடுகிற அளவாக இருந்தது _______ ஆகும்.**

(A) வேலி
(B) கழஞ்சு
(C) மரக்கால்
(D) கூப்பீடு

**9.** VCGS-2022 **சங்க காலத்தில் நாள் ஒன்றுக்கு _______ நாழிகைகள் இருந்தன.**

(A) இருபத்தி நான்கு
(B) இருபது
(C) பத்து
(D) அறுபது

**10.** VCGS-2022 **சங்க கால சமூகத்தின் வீரமிக்க பொழுதுபோக்காக _______ஐக் கருதினர்.**

(A) ஏறுதழுவுதல்
(B) அம்மானை
(C) கிளுகிளி
(D) கலங்கு

**11.** VCGS-2022 **இடைக்காலத் தென்னிந்தியாவில் கிராமத்தின் கைவினைஞர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?**

(A) ஆயகாரர்
(B) இனாம்தார்
(C) மிராசிதார்
(D) சமீன்தார்

**12.** TNPSC-2022 **கீழ்க்கண்டவற்றுள் பெண்களின் பருவநிலைகளை வரிசைப்படுத்துக:**
**1. மங்கை 2. அரிவை 3. மடந்தை 4. தெரிவை**

(A) 1 4 2 3
(B) 1 3 2 4
(C) 1 2 4 3
(D) 3 1 2 4

**13.** Surveyor/Draftsman-2022 **முசிறியை "இந்தியாவின் முதல் பேரங்காடி" என்று கூறும் வெளிநாட்டு நூல் _______ ஆகும்.**

(A) இயற்கை வரலாறு
(B) புவியியல்
(C) எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ்
(D) புத்த பதிப்புகள் (நாட்குறிப்புகள்)

**14.** G-2-2022 **பிற்காலச் சோழர் காலத்தில் 'இறையிலி' என்பது _______ தொடர்புடையது.**

(A) வரி இல்லாத நிலம்
(B) வரி வசூலிக்கப்பட்ட நிலம்
(C) கோயில் நிலத்திற்கு விதிக்கப்பட்ட வரி
(D) குத்தகைக்கு விடப்பட்ட நிலத்திற்கான வரி

**15.** G-6 Forest Apprentice-2022 **சங்க கால சமுதாயத்தில் கூறப்பட்டுள்ள 'திணை' எனும் நிலப்பரப்புப் பிரிவுகளைச் சரியாக இணைப்படுத்துக.**

**(a) குறிஞ்சி - 1. கடலோரப் பகுதி**

**(b) முல்லை - 2. விவசாயப் பகுதி**

**(c) மருதம் - 3. பாலைவனப் பகுதி**

**(d) நெய்தல் - 4. மலைப் பகுதிகள்**

**(e) பாலை - 5. காடும் காடு சார்ந்த மேய்ச்சல் பகுதி**

**(A)** 1 2 3 4 5
**(B)** 2 3 4 5 1
**(C)** 3 5 4 1 2
**(D)** 4 5 2 1 3

---

**16.** G-6 Forest Apprentice-2022 **கீழ்வருவனவற்றுள் எது மக்களின் வாழ்வையும், பொருள் பயன்பாட்டுப் பண்பாட்டையும் குறித்து விளக்குகிறது?**

**(A)** இனத் தொல்லியல்
**(B)** வரலாற்றுத் தொல்லியல்
**(C)** பொருளாதாரத் தொல்லியல்
**(D)** வரலாற்றுக்கு முந்தைய தொல்லியல்

---

**17.** G-6 Forest Apprentice-2022 **'அய்மா' என்ற சொல் எதைக் குறிக்கின்றது?**

**(A)** மன்னர் முன் மண்டியிடுதல்
**(B)** நிலத்தில் முத்தமிடுதல்
**(C)** நான்கு வணக்கங்கள்
**(D)** கடவுள் வழிபாட்டுக்கு ஒதுக்கப்படும் நிலம்

---

**18.** EO-GIII-2022 **சங்க காலத்தில் விவசாய நிலங்களை உள்ளிட்ட நிலப்பரப்பு _______ என அழைக்கப்பட்டது.**

**(A)** குறிஞ்சி
**(B)** முல்லை
**(C)** மருதம்
**(D)** நெய்தல்

---

**19.** EO-GIII-2022 **பல்லவன் கோவில் தகடுகள் எதைப் பற்றிக் கூறுகின்றன?**

**(A)** சுவேதம்பரா சமண வரிசை
**(B)** திகம்பரா சமண வரிசை
**(C)** புத்த கொள்கைகள்
**(D)** பல்லவ அரசர்களின் மரபு வரிசை

---

**20.** EO-GIII-2022 **வருணன் என்ற கடவுளை வணங்கியவர்கள்**

**(A)** குறிஞ்சி நில மக்கள்
**(B)** முல்லை நில மக்கள்
**(C)** நெய்தல் நில மக்கள்
**(D)** மருதம் நில மக்கள்

---

**21.** EO-2022 **டெர்ரகோடா மற்றும் சைப்ரஸ் தீவில் எந்த பேரரசின் தூதுக்குழுவை பேரரசர் அகஸ்டஸ் சீசர் வரவேற்றார்?**

**(A)** சேர
**(B)** சோழ
**(C)** பல்லவ
**(D)** பாண்டிய

---

**22.** DPGS-2022 **'Houangtche' குறிக்கும் இடம்**

**(A)** காஞ்சி
**(B)** மைசூர்
**(C)** பாண்டியர்கள்
**(D)** புகார்

**23.** **CEGS-2022** **"கிழக்கின் டிராய்" என அழைக்கப்படுவது**

**(A)** வேலூர் கோட்டை
**(B)** செஞ்சிக் கோட்டை
**(C)** தரங்கம்பாடி கோட்டை
**(D)** சிவகங்கை கோட்டை

---

**24.** **CAGS-2022** **சங்ககால சேரர்களின் தலைநகரம்**

**(A)** காஞ்சி
**(B)** முசிறி
**(C)** வெண்ணி
**(D)** வஞ்சி

---

**25.** **CAGS-2022** **கரிகாற் சோழனின் இயற்பெயர்**

**(A)** கரிகாலன்
**(B)** அருண்மொழி
**(C)** திருமாவளவன்
**(D)** சுந்தரர்

---

**26.** **G-1-2022** **பொருத்துக:**

**திணை - கடவுள்**
(a) குறிஞ்சி - 1. காளி
(b) முல்லை - 2. முருகன்
(c) மருதம் - 3. இந்திரன்
(d) பாலை - 4. திருமால்

**(A)** 3 4 1 2
**(B)** 1 3 4 2
**(C)** 2 4 3 1
**(D)** 4 2 3 1

---

**27.** **G-1-2022** **சங்க காலத்தில் தமிழகம் முழுவதிலும் கொண்டாடப்பட்ட பண்டிகை எது?**

**(A)** ஆடிப்பூரம்
**(B)** ஓணம்
**(C)** நவராத்திரி
**(D)** திருவாதிரை

---

**28.** **CSSE & SI Fisheries-FEB-2023, REPORTER-2022** **சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறை யாது?**

**(A)** கரோஷ்டி
**(B)** தேவநாகரி
**(C)** தமிழ்-பிராமி
**(D)** கிரந்தம்

---

**29.** **Bursar-MAR-2023** **சங்க காலத்தில் 'அம்பணம்' என்பது யாது?**

**(A)** ஒரு இசைக் கருவி
**(B)** நெல்லை அளக்க பயன்படும் கருவி
**(C)** ஒரு வகை நடனம்
**(D)** ஒரு வகை திருவிழா

---

**30.** **Health Officer-MAR-2023** **கீழ்கண்டவற்றில் சங்க கால பெண்கள் நெற்றியில் அணியும் நகைகளில் அடங்காதது எது?**

**(A)** வயந்தகம்
**(B)** புல்லகம்
**(C)** மகரபகுவை
**(D)** முத்தாரை

---

**31.** Health Officer-MAR-2023 'யவன பிரியா' என்ற சொல் ______க் குறிக்கின்றது.

(A) மிளகு
(B) மஞ்சள்
(C) இஞ்சி
(D) ஏலக்காய்

---

**32.** Health Officer-MAR-2023 படையாட்சியர் ______ வகுப்பினர் ஆவர்.

(A) இசைக் கலைஞர்கள்
(B) நடனக் கலைஞர்கள்
(C) வேட்டைக்காரர்கள்
(D) போராளிகள்

---

**33.** Health Officer-MAR-2023 நிலப்பகுதிகளை அதோடு தொடர்புடைய விலங்குகளுடன் பொருத்துக.

(a) குறிஞ்சி - 1. ஆடு
(b) பாலை - 2. எருமை
(c) முல்லை - 3. புலி
(d) மருதம் - 4. நரி

(A) 4 3 2 1
(B) 2 1 3 4
(C) 3 4 1 2
(D) 3 2 1 4

---

**34.** Health Officer-MAR-2023 கீழ்கண்டவற்றில் முல்லை நில தலைவன் அல்லாதவர் யார்?

(A) அண்ணல்
(B) தோன்றல்
(C) நாடான்
(D) வெற்பன்

---

**35.** Health Officer-MAR-2023 'ஆள்விலைப் பிரமாண இசைவுத் தீட்டு' என்பது

(A) ஏற்றுமதி வரி
(B) இறக்குமதி வரி
(C) அடிமை வரி
(D) அடிமை விற்பனை விலை ஆவணம்

---

**36.** Road Inspector-MAY-2023 கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது?

(i) இளஞ்சேட்சென்னி - செங்குட்டுவன்
(ii) மாங்குளம் - தமிழ் பிராமி கல்வெட்டு
(iii) உருத்திரங்கண்ணனார் - பட்டினப்பாலை
(iv) வேளிர்குல சிற்றரசர் - திதியன்

(A) (i) மட்டும்
(B) (ii) மட்டும்
(C) (iii) மட்டும்
(D) (iv) மட்டும்

---

**37.** DEO-MAY-2023 **வலியுறுத்தல் மற்றும் காரணம் வகை:**
**வலியுறுத்தல் [A]: தமிழக ஆட்சியாளர்கள் தமிழ் மற்றும் தமிழ் புலவர்களை அவர்கள் அவையில் ஆதரவளித்தனர்.**
**காரணம் [R]: மன்றம், அவை, அம்பலம் மற்றும் மன்று போன்ற சொற்கள் அரச அவையில் பயன்படுத்தப்பட்டன.**

**(A)** [A] என்பது உண்மை ஆனால் [R] என்பது தவறு
**(B)** [A] மற்றும் [R] இவை இரண்டும் உண்மை மற்றும் [R] என்பது [A] யின் சரியான விளக்கம்
**(C)** [A] என்பது தவறு [R] என்பது உண்மை
**(D)** [A] மற்றும் [R] இவை இரண்டும் உண்மையானது ஆனால் [R] என்பது [A]யின் சரியான விளக்கம் அல்ல

---

**38.** DEO-MAY-2023 **IAY என்ன அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்கிறது?**

**(A)** தண்ணீர்
**(B)** ஆடை
**(C)** வீடு
**(D)** உணவு

---

**39.** LIBRARY-2023 **சங்கப்புலவர்களையும், இலக்கியங்களையும் ஆதரித்தவர்கள்**

**(A)** சோழர்கள்
**(B)** பல்லவர்கள்
**(C)** பாண்டியர்கள்
**(D)** சேரர்கள்

---

**40.** CESS-2023 **_________ கரிகாலனுடைய ஆட்சியின் சிறப்பு பற்றி விரிவாக கூறுகிறது.**

**(A)** மதுரைக்காஞ்சி
**(B)** பட்டினப்பாலை
**(C)** பதிற்றுப்பத்து
**(D)** பரிபாடல்

---

**41.** JA-2023 **நிலம் அளப்பதற்கு ஏர், நிவர்த்தனம், பட்டிகை என்ற முறைகள் யாருடைய காலத்தில் கையாளப்பட்டன?**

**(A)** சோழர் காலம்
**(B)** சேரர் காலம்
**(C)** பாண்டியர் காலம்
**(D)** பல்லவர் காலம்

---

**42.** JA-2023 **தமிழ்ச் சமூகத்தில் மகளிர்க்குக் கற்பின் குறியீடாக அமையும் மலர் எது?**

**(A)** மல்லிகை
**(B)** ரோஜா
**(C)** முல்லை
**(D)** அல்லி

---

**43.** JSO-2023 **சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**
**பண்டைய காலத் தமிழர்களின் வணிக (தொடர்பு நடவடிக்கை) பற்றி பின்வரும் கூற்றில் எது உண்மையானவை?**
**(i) காவிரிப்பூம்பட்டினம், அனுராதபுரம் என்றும் அழைக்கப்பட்டது**
**(ii) அல் அங்காடி மற்றும் நாள் அங்காடி என்று இரண்டு வகை சந்தை இருந்து வந்தது**
**(iii) பழங்கால தமிழர்களோடு யவனர்கள் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர்**

**(A)** (i) மட்டும்
**(B)** (ii) மற்றும் (iii) மட்டும்
**(C)** (i) மற்றும் (ii) மட்டும்
**(D)** (i) மற்றும் (iii) மட்டும்

---

**44.** JSO-2023 **சங்ககால மன்னனான பசும்பூண் பாண்டியனின் யானைகளின் மேல் வெள்ளைக் கொடி பறந்தது என்ற செய்தியைக் கூறும் நூல்?**

**(A)** அகநானூறு
**(B)** புறநானூறு
**(C)** கலித்தொகை
**(D)** பரிபாடல்

**45.** JSO-2023 **பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்துக. கொடுக்கப்பட்ட குறியீடுகளைக் கொண்டு விடையளி.**

**(a) பொழுதுபோக்கு நகரம் - 1. பனாஜி**
**(b) நிர்வாக நகரம் - 2. புது டெல்லி**
**(c) தொழில் நகரம் - 3. ஜாம்ஷெட்பூர்**
**(d) சமய நகரம் - 4. மதுரை**

**(A)** 2 1 3 4
**(B)** 1 2 3 4
**(C)** 4 3 2 1
**(D)** 2 4 3 1

**46.** COMBINED RESEARCH ASSISTANT-2023 **கூற்று [A]: பாலை நிலமானது குடியிருக்கத்தக்க நிலப்பரப்பு ஆகும்.**
**காரணம் [R]: பாலை நிலத்து மக்கள் விலங்குகளை வளர்த்தனர்.**

**(A)** [A] மற்றும் [R] சரி
**(B)** [A] சரி ஆனால் [R] தவறு
**(C)** [A] தவறு ஆனால் [R] சரி
**(D)** [A] மற்றும் [R] சரி, ஆனால் [R], [A]-விற்கான சரியான விளக்கம் அல்ல

**47.** ASSISTANT TRAINING OFFICER (TEXTILE)-2023 **புதிய கற்கால பண்பாடு தமிழ்நாட்டில் பரவியிருந்த இடம்**

**(A)** கன்னியாகுமரி
**(B)** பையம்பள்ளி
**(C)** கொடுமணல்
**(D)** ஆதிச்சநல்லூர்

**48.** JUNIOR ANALYST (TN MEDICAL SERVICE)-2023 **தமிழ்ச் சமூகம் பெற்றிருக்கும் வாய்மொழி வழக்காறுகளை என்னவென்று கூறலாம்?**

**(i) பாண் மரபு**
**(ii) பாணர் மரபு**

**(A)** (i) மட்டும்
**(B)** (ii) மட்டும்
**(C)** (i) மற்றும் (ii)
**(D)** மேற்காணும் எவையும் அல்ல

**49.** JUNIOR ANALYST (TN MEDICAL SERVICE)-2023 **கீழ்வருவனவற்றுள் எவை சோழர்கள் காலத்தில் கல்வி மையமாகத் திகழ்ந்தது?**

**1. எண்ணாயிரம்**
**2. திருபுவனம்**
**3. திருமுக்கூடல்**
**4. திருவொற்றியூர்**

**(A)** 1, 2 மட்டும்
**(B)** 2, 3 மட்டும்
**(C)** 4 மட்டும்
**(D)** மேற்கூறிய அனைத்தும்

**50.** **MASS INTERVIEWER-2023** **கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருந்தவில்லை?**

**(i) குறிஞ்சி - புணர்தல்**

**(ii) முல்லை - இருத்தல்**

**(iii) மருதம் - ஊடல்**

**(iv) நெய்தல் - பிரிதல்**

**(A)** (i) மட்டும்
**(B)** (ii) மட்டும்
**(C)** (iii) மட்டும்
**(D)** (iv) மட்டும்

---

**51.** **HINDU RELIGIOUS EO G1-2024** **கி.மு. பத்தாம் நூற்றாண்டின் அரசனாகிய சாலமனுக்குத் தமிழ் நாட்டுக் கப்பல்கள் வாயிலாகக் கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் எவை?**

**(A)** மயில் தோகை, அரிசி, இஞ்சி
**(B)** மயில் தோகை, யானைத் தந்தம், வாசனைப் பொருட்கள்
**(C)** இஞ்சி, திப்பிலி, வாசனைப் பொருட்கள்
**(D)** இஞ்சி, திப்பிலி, அரிசி

---

**52.** **COMBINED ACCOUNTS SERVICE-2024** **தமிழ்நாட்டில் 8-ம் நூற்றாண்டு மற்றும் 13-ம் நூற்றாண்டுகளுக்கு இடையில் ஐநூற்றுவர் என்பவர்கள்**

**(A)** குதிரைப்படை
**(B)** காலாட்படை
**(C)** வணிகர் சங்கங்கள்
**(D)** கப்பற்படை

---

**53.** **COMBINED ACCOUNTS SERVICE-2024** **பொருத்துக.**

**(a) குறிஞ்சி - 1. சூறையாடல்**

**(b) பாலை - 2. களையெடுத்தல்**

**(c) முல்லை - 3. காளை தழுவல்**

**(d) மருதம் - 4. வேட்டையாடல்**

**(A)** 4 3 2 1
**(B)** 4 1 3 2
**(C)** 4 2 1 3
**(D)** 1 2 3 4

---

**54.** **G4-2024** **ரோம் நாட்டைச் சேர்ந்த மூத்த பிளினி தன்னுடைய இயற்கை வரலாறு எனும் நூலில் ________ இந்தியாவின் முதல் பேரங்காடி எனக் குறிப்பிட்டுள்ளார்.**

**(A)** காவிரிப்பூம்பட்டினம்
**(B)** நாகப்பட்டினம்
**(C)** முசிறி
**(D)** கொற்கை

---

**55.** **G4-2024** **அசோகர் கல்வெட்டில் குறிப்பிடப்படும் "சத்யபுத்ரர்"**

**(A)** அதியமான்
**(B)** கரிகாலன்
**(C)** பாரி
**(D)** நெடுஞ்சேரலாதன்

---

**56.** G2 & 2A-2024 **கீழே கொடுக்கப்பட்டுள்ள காலத்தில் நக்கீரர் மிக முக்கிய புலவராக எந்தச் சங்க காலத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார்?**

**(a) முதல் சங்கம்**
**(b) மூன்றாம் சங்கம்**
**(c) இரண்டாம் சங்கம்**
**(d) நான்காம் சங்கம்**

**(A)** (a) மட்டும்
**(B)** (b) மட்டும்
**(C)** (c) மற்றும் (d) மட்டும்
**(D)** (b) மற்றும் (c) மட்டும்

---

**57.** G1-2024 **பின்வருவனவற்றுள் சமண அறிஞர்களின் முக்கிய கற்றல் மையமாக இருந்த இடம் எது?**

**(A)** மதுரை
**(B)** திருச்சி
**(C)** தஞ்சாவூர்
**(D)** திருவாலங்காடு

---

**58.** G1-2024 **மன்னர்களின் பட்டங்களைப் பொருத்துக:**

**(a) பாண்டியர் - 1. ஆதவன்**
**(b) சேரர் - 2. திதியன்**
**(c) சோழர் - 3. செழியன்**
**(d) ஆய் - 4. செம்பியன்**

**(A)** 3 4 2 1
**(B)** 3 1 4 2
**(C)** 3 2 1 4
**(D)** 4 3 1 2

---

**59.** G1-2024 **'கண்ணகி' க்கு ______ ஆல் கோயில் கட்டப்பட்டது.**

**(A)** கரிகாலன்
**(B)** செங்குட்டுவன்
**(C)** உக்ரபெருவழுதி
**(D)** நெடியோன்

---

**60.** G1-2024 **உத்திரமேரூர் கல்வெட்டுகள் தெரிவிப்பவை**

**(1) கிராம நிர்வாகம்**
**(2) எழுதப்பட்ட அரசியல் அமைப்பு**
**(3) முழுமையான தேர்தல் முறை**
**(4) பராந்தகனின் நிர்வாகம்**

**(A)** (1) மட்டும்
**(B)** (1), (2), (3) மட்டும்
**(C)** (1), (2) மட்டும்
**(D)** மேற்கூறிய அனைத்தும்

---

**61.** CTSE-IV-2024 **தமிழ்நாட்டில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட பாறை ஓவியம் ______ யில் உள்ளது.**

**(A)** பெருமுக்கல்
**(B)** மல்லபாடி
**(C)** கீழ்வாலை
**(D)** செத்தவரை

---

**62.** CTSE-ITI-2024 **பண்டைய தமிழகத்தின் நிர்வாகப் பிரிவுகள் ஏறுவரிசையில் இவ்வாறு அமைந்திருந்தது**

**(1) ஊர்**

**(2) நாடு**

**(3) கூற்றம்**

**(4) மண்டலம்**

**(A)** (3), (2), (1), (4)
**(B)** (4), (3), (2), (1)
**(C)** (1), (3), (2), (4)
**(D)** (1), (2), (3), (4)

---

**63.** CTSE-IV-II-2024 **பின்வருவனவற்றைப் பொருத்துக.**

**(a) ஸ்ட்ராபோ - 1. கிரேக்க வரலாற்றாளர்**

**(b) J.A. டுபோயிஸ் - 2. ரோமப்பயணி**

**(c) மெகஸ்தனிஸ் - 3. சீனப்பயணி**

**(d) பாகியான் - 4. பிரெஞ்சு மிஷனரி**

**(A)** 4 2 3 1
**(B)** 2 4 1 3
**(C)** 1 3 2 4
**(D)** 2 3 4 1

---

**64.** G1B&C-2024 **இந்நடுகல் கல்வெட்டு எவ்வாறு தமிழில் படித்துப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது? [கல்வெட்டு: கல் / பேடுதீயன் அந்தவன் / கூடல் ஊர் ஆகோள்]**

**(A)** ஆகோளில் மரணமடைந்த அந்தவனுக்கு பேடு தீய குலம் சார்ந்த கூடலூர் கல்
**(B)** ஆகோள் அந்தவன் தீயன் கூடல் ஊர் கல்பேடு
**(C)** கல்பேடு தீயன் அந்தவன் கூடல் ஊர் ஆகோள்
**(D)** கூடலூர் ஆகோளில் மரணமடைந்த பேடு தீய குலம் சார்ந்த அந்தவனுக்கு எடுக்கப்பட்ட கல்

---

**65.** G1B&C-2024 **பின்வரும் மானியங்களை காலவரிசைப்படி வரிசைப்படுத்துக.**

**1. வேள்விக்குடி மானியம்**

**2. சிவகாசி மானியம்**

**3. சின்னமனூர் மானியம்**

**4. ஸ்ரீவார மங்கலம் மானியம்**

**(A)** 4, 2, 3, 1
**(B)** 1, 4, 3, 2
**(C)** 3, 2, 1, 4
**(D)** 2, 1, 3, 4

---

**66.** G1B&C-2024 **முல்லை நிலம் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?**

**1. முல்லை நில மக்கள் ஆநிரைகளை வளர்க்கும் தொழிலுடையவர்கள்**

**2. இந்திரனை கடவுளாக வணங்குவர்**

**3. முல்லை நிலம் என்பது காடும் காடு சார்ந்த நிலமாகும்**

**(A)** 1 மற்றும் 2 மட்டும்
**(B)** 2 மற்றும் 3 மட்டும்
**(C)** 1 மற்றும் 3 மட்டும்
**(D)** 2 மட்டும்

---

**67.** APP-GII-2025 **பொருத்துக:**

**(a) முல்லை - 1. வருணன்**

**(b) மருதம் - 2. கொற்றவை**

**(c) நெய்தல் - 3. மாயோன்**

**(d) பாலை - 4. வேந்தன்**

**(A)** 3 1 4 2
**(B)** 3 4 1 2
**(C)** 3 2 4 1
**(D)** 1 4 2 3

---

**68.** SCE-2025 **திருநாவுக்கரசர் "கல்வியில் கரையிலாத" எனக் குறிப்பிட்ட நகரம்**

**(A)** மதுரை
**(B)** காஞ்சி
**(C)** பூம்புகார்
**(D)** தஞ்சை

---

**69.** SCE-2025 **மாங்குளம் தமிழ்-பிராமி கல்வெட்டில் குறிப்பிட்டிருக்கும் பெயர்**

**(A)** நெடுஞ்செழியன்
**(B)** செங்குட்டுவன்
**(C)** நெடுஞ்சேரலாதன்
**(D)** கரிகாலன்

---

**70.** G1&1A-2025 **கூற்று [A]: புலவர்களில் சிலரே பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். பெரும்பாலோர் தத்தமக்கு விருப்பமான தொழில்களைச் செய்து வாழ்வு நடத்தினர். காரணம் [R]: பரிசில் வாழ்க்கையை மேற்கொண்டோர் தகுதிக்குக் குறைவாக பரிசு நல்கியபோதும் முகம் மாறி அளித்தபோதும் அப்பொருளை துச்சமென மதித்து மறுத்தனர்.**

**(A)** [A] சரி, ஆனால் [R] தவறு
**(B)** [A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி, ஆனால் [A] சரி என்பதற்கு [R] சரியான விளக்கமல்ல
**(C)** [A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி; மற்றும் [R] ஆனது [A] விற்கான சரியான விளக்கமாகும்
**(D)** [A] தவறானது, [R] சரியானது

---

**71.** G1&1A-2025 **தவறான இணையைக் கண்டறிக:**

**1. தொடக்கு - கழுத்திற் பூட்டியிருக்கும் சங்கிலி**

**2. ஆண்டலை அடுப்பு - சேவல் வடிவானது**

**3. ஐயவித்துலாம் - கண்ணைக் கொத்தும் ஆயுதம்**

**4. எறிசிரல் - அம்புகள் வைத்தெய்யும் எந்திரம்**

**(A)** 1 மற்றும் 4 தவறானவை
**(B)** 1 மற்றும் 2 தவறானவை
**(C)** 2 மற்றும் 3 தவறானவை
**(D)** 3 மற்றும் 4 தவறானவை

---

**72.** CTS (IV Post)-2025, JRO & Asst Prof (Psychology)-MAR-2023 பிரதான தெய்வங்களை அவற்றின் தொடர்புடைய நிலங்களுடன் சரியாகப் பொருத்தவும்.

(a) மாயோன் - 1. நெய்தல்
(b) சேயோன் - 2. குறிஞ்சி
(c) வேந்தன் - 3. முல்லை
(d) வருணன் - 4. மருதம்

(A) 2 3 1 4
(B) 3 2 4 1
(C) 4 1 2 3
(D) 1 3 2 4

**73.** Group 2 & 2A-2025 பின்வருவனவற்றுள் எவை சரியாகப் பொருந்தியுள்ளன?

(1) குறிஞ்சி - கிளி
(2) முல்லை - காட்டுக் கோழி
(3) மருதம் - வானம்பாடி
(4) நெய்தல் - ஆந்தை
(5) பாலை - புறா

(A) (1), (2), (3), (4), (5)
(B) (2), (3), (4)
(C) (3), (4), (5)
(D) (1), (2), (5)

**74.** CTS ITI Level II-2025 பண்டைய தமிழக கால வரையறையைப் பொருத்துக:

(a) பெருங்கற்காலம் - 1. கி.பி. 300 முதல் கி.பி. 500 வரை
(b) சங்க காலம் - 2. கி.மு. 400 முதல் கி.மு. 300 வரை
(c) பிராமி எழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் - 3. கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை
(d) சங்க மருவிய காலம் - 4. கி.மு. 1300 முதல் கி.மு. 300 வரை

(A) (1) (2) (3) (4)
(B) (4) (3) (2) (1)
(C) (2) (1) (4) (3)
(D) (1) (3) (4) (2)

**75.** CTS ITI Level II-2025 பின்வருவனவற்றை சரியாக பொருத்துக:

(a) கிழவன் - (1) நில உரிமையாளர்
(b) ஆசுடையான் - (2) வழி நடத்துவோர்
(c) நாயகம் - (3) தலைவர்
(d) அரையான் - (4) ஊரார்
(5) படை பிரிவின் தலைவன்

(A) (2) (1) (5) (4)
(B) (3) (1) (5) (2)
(C) (5) (3) (2) (4)
(D) (2) (4) (1) (3)

**76.** APP Grade II-2026 **கீழ்க்கண்டவற்றுள் சரியான பொருத்தங்களை தேர்ந்தெடுக்கவும்.**

**(1) ஹைதர் அலி - கருடன்**

**(2) திப்பு சுல்தான் - புலி**

**(3) சோழர்கள் - புலி**

**(4) பாண்டியர்கள் - சிங்கம்**

**(A)** (1) மற்றும் (3) சரியானவை
**(B)** (1) மற்றும் (2) சரியானவை
**(C)** (2) மற்றும் (3) சரியானவை
**(D)** (3) மற்றும் (4) சரியானவை

---

**77.** APP Grade II-2026 **பெற்றோரின் சம்மதம் இன்றி நடைபெறும் திருமணத்தின் வகை**

**(A)** காந்தர்வம்
**(B)** பிரம்மம்
**(C)** ஆரிடம்
**(D)** அசுரம்

---

**78.** APP Grade II-2026 **பின்வரும் மன்னர்களை அவரது ராஜ்ஜியங்களுடன் பொருத்தவும்.**

**(a) நல்லியக்கோடன் - 1. செங்கம்**

**(b) அதியமான் - 2. கோவிலூர்**

**(c) மலையமான் திருமுடிக்காரி - 3. திண்டிவனம்**

**(d) நன்னன் - 4. தகடூர்**

**(A)** 4 3 1 2
**(B)** 1 2 3 4
**(C)** 3 4 2 1
**(D)** 3 1 2 4

---

**79.** CTS (IV Post)-2026 **பின்வரும் கூற்று மற்றும் காரணத்தைப் படித்துக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டிலிருந்து சரியான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்:**

**கூற்று [A]: கி.மு. 4 ஆயிரம் ஆண்டுகளிலேயே தமிழர்கள் இரும்பைப் பற்றிய அறிவைப் பெற்றிருந்தனர்.**

**காரணம் [R]: கி.மு. 2427 முதல் கி.மு. 3345 வரையிலான கால கட்டத்தைச் சேர்ந்த இரும்புப் பொருட்கள் தமிழ்நாட்டின் வெவ்வேறு இடங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டன.**

**(A)** [A] சரி ஆனால் [R] தவறு
**(B)** [A] தவறு ஆனால் [R] சரி
**(C)** [A] மற்றும் [R] இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A]ன் சரியான விளக்கம்
**(D)** [A] மற்றும் [R] இரண்டும் சரி ஆனால் [R] என்பது [A]ன் சரியான விளக்கம் அல்ல

---

**80.** Group 2A Mains-2025 **பின்வரும் காலங்களை முறைப்படி வரிசைப்படுத்துக:**

**(1) வரலாற்றுக்கு முற்பட்ட காலம்**

**(2) சோழர் காலம்**

**(3) சங்க காலம்**

**(4) பல்லவர் காலம்**

**(A)** (1), (4), (3), (2)
**(B)** (2), (4), (1), (3)
**(C)** (1), (3), (4), (2)
**(D)** (2), (3), (4), (1)

---

**81.** Group 2A Mains (Revoked)-2026 **சரியாகப் பொருந்தியுள்ளவற்றைத் தேர்வு செய்க.**

**(1) சேர அரசர் - வஞ்சி–தொண்டி**

**(2) சோழ அரசர் - மதுரை–கொற்கை**

**(3) பாண்டிய அரசர் - உறையூர்–பூம்புகார்**

**(4) அசோக மன்னன் - சம்பா கல்வெட்டு**

**(A)** (3) மற்றும் (4) மட்டும் **(B)** (1) மற்றும் (4) மட்டும்

**(C)** (2) மற்றும் (3) மட்டும் **(D)** (4) மற்றும் (2) மட்டும்

SHANMUGAM IAS ACADEMY

# விடைகள் மற்றும் விளக்கங்கள்

1. **(C) அருள்மிகு அரங்கநாதர் கோயில் கோபுரம்**
ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோயிலின் இராஜகோபுரம் (சுமார் 73 மீ., 13 நிலைகள்) தெற்கு ஆசியாவின் மிக உயரமான கோபுரம்.

2. **(B) ஐம்பெருங்குழு மற்றும் எண்பேராயம்**
சங்க கால மன்னர்களுக்கு ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் ஆட்சியில் உதவின. சபா–சமிதி வேத காலம்; அஷ்டதிக்கஜங்கள் விஜயநகரம்; அஷ்டப்பிரதான் மராட்டியர்.

3. **(A) இபன் பதூதா**
மொராக்கோவைச் சேர்ந்த இபன் பதூதா முகமது பின் துக்ளக் காலத்தில் இந்தியா வந்து, மதுரை சுல்தானகம் பற்றியும் எழுதினார்.

4. **(C) அகநானூறு**
அகநானூற்றுப் பாடல்கள் (குறிப்பாக 86, 136) சங்ககாலத் திருமணச் சடங்குகளை விரிவாக விவரிக்கின்றன.

5. **(D) 4 2 1 3**
குறிஞ்சி – மலை, முல்லை – காடு, மருதம் – வயல் (வளமான நிலம்), நெய்தல் – கடற்கரை. ஐந்தாவது பாலை – வறண்ட நிலம்.

6. **(C) A சரி, B தவறு**
8-வது உலகத் தமிழ் மாநாடு 1995-ல் தஞ்சாவூரில் நடந்தது. உலகச் செம்மொழித் தமிழ் மாநாடு 2010-ல் கோயம்புத்தூரில் நடந்தது.

7. **(D) அறக் கற்பு**
கணவன் இறந்தவுடன் உயிர் துறந்த கோப்பெருந்தேவியின் கற்பு அறக்கற்பு எனப்படுகிறது; சினந்து மதுரையை எரித்த கண்ணகியின் கற்பு மறக்கற்பு எனப்படுகிறது.

8. **(B) கழஞ்சு**
கழஞ்சு – பொன் நிறுக்கும் அளவு. வேலி – நில அளவு; மரக்கால் – தானிய அளவு.

9. **(D) அறுபது**
ஒரு நாள் = 60 நாழிகைகள்; ஒரு நாழிகை = 24 நிமிடங்கள்.

10. **(A) ஏறுதழுவுதல்**
ஏறுதழுவுதல் (இன்றைய ஜல்லிக்கட்டு) முல்லை நில வீர விளையாட்டு; கலித்தொகையின் முல்லைக்கலியில் விவரிக்கப்படுகிறது.

11. **(A) ஆயகாரர்**
ஆயகாரர்கள் – கிராமப் பணியாளர்கள், கைவினைஞர்கள் (விஜயநகர காலம்). மிராசிதார், சமீன்தார் – நில உடைமையாளர்கள்.

12. **(B) 1 3 2 4**
பெண்களின் ஏழு பருவங்கள்: பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண். எனவே மங்கை → மடந்தை → அரிவை → தெரிவை.

**13.** **(A) இயற்கை வரலாறு**

பிளினியின் 'இயற்கை வரலாறு' (Natural History) முசிறியை 'இந்தியாவின் முதல் பேரங்காடி' (primum emporium Indiae) என்று குறிப்பிடுகிறது.

**14.** **(A) வரி இல்லாத நிலம்**

சோழர் காலத்தில் 'இறை' என்பது வரி; 'இறையிலி' என்பது வரி விலக்கு அளிக்கப்பட்ட நிலம்.

**15.** **(D) 4 5 2 1 3**

குறிஞ்சி – மலை, முல்லை – காடு/மேய்ச்சல், மருதம் – வயல், நெய்தல் – கடற்கரை, பாலை – வறண்ட நிலம்.

**16.** **(A) இனத் தொல்லியல்**

இன்று வாழும் மக்களின் வாழ்க்கை முறையையும் பொருள் பண்பாட்டையும் ஆய்வு செய்து பழங்காலத்தைப் புரிந்துகொள்வது இனத் தொல்லியல் ஆகும்.

**17.** **(D) கடவுள் வழிபாட்டுக்கு ஒதுக்கப்படும் நிலம்**

முகலாயர் காலத்தில் 'அய்மா' (மதத்-இ-மாஷ்) என்பது சமய அறிஞர்களுக்கும் வழிபாட்டுக்கும் வழங்கப்பட்ட வரியில்லா நிலக்கொடை.

**18.** **(C) மருதம்**

வயலும் வயல் சார்ந்த வேளாண் நிலமும் மருதம் எனப்பட்டது.

**19.** **(B) திகம்பரா சமண வரிசை**

சிம்மவர்மனின் பள்ளன்கோவில் (பல்லவன் கோவில்) செப்பேடுகள் திகம்பர சமணத் துறவிக்கு வழங்கப்பட்ட கொடையைக் குறிப்பிடுகின்றன.

**20.** **(C) நெய்தல் நில மக்கள்**

கடற்கரை நிலமான நெய்தலின் தெய்வம் வருணன் (கடலோன்).

**21.** **(D) பாண்டிய**

பாண்டிய மன்னன் ரோமப் பேரரசர் அகஸ்டஸுக்குத் தூதுக்குழுவை அனுப்பியதாக ஸ்ட்ராபோ போன்றோர் குறிப்பிடுகின்றனர்.

**22.** **(A) காஞ்சி**

சீனக் குறிப்புகளில் 'ஹுவாங்-சே' (Houangtche) என்பது காஞ்சியைக் குறிக்கிறது.

**23.** **(B) செஞ்சிக் கோட்டை**

வெல்ல முடியாத வலிமைக்காக செஞ்சிக் கோட்டை ஆங்கிலேயரால் 'கிழக்கின் டிராய்' எனப்பட்டது.

**24.** **(D) வஞ்சி**

சங்ககாலச் சேரர்களின் தலைநகரம் வஞ்சி (கரூர்); முசிறி அவர்களின் துறைமுகம்.

**25.** **(C) திருமாவளவன்**

கரிகாலனின் இயற்பெயர் திருமாவளவன்; அருண்மொழி என்பது முதலாம் இராஜராஜனின் பெயர்.

**26.** **(C) 2 4 3 1**

குறிஞ்சி – முருகன், முல்லை – திருமால், மருதம் – இந்திரன், பாலை – கொற்றவை (காளி).

**27. (D) திருவாதிரை**

பரிபாடல் மார்கழித் திருவாதிரை நாளில் நடந்த விழாவையும், பெண்களின் 'அம்பா ஆடல்' நீராடலையும் விவரிக்கிறது; இது தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்ட விழா.

**28. (C) தமிழ்-பிராமி**

சங்க காலக் கல்வெட்டுகள் தமிழ்-பிராமி எழுத்தில் உள்ளன.

**29. (B) நெல்லை அளக்க பயன்படும் கருவி**

அம்பணம் என்பது சங்க காலத்தில் நெல்லை அளக்கப் பயன்பட்ட அளவைக் கருவி.

**30. (D) முத்தாரை**

வயந்தகம், புல்லகம், மகரப்பகுவாய் ஆகியவை தலை/நெற்றி அணிகள்; முத்தாரம் கழுத்தில் அணியும் முத்து மாலை.

**31. (A) மிளகு**

யவனர்கள் (ரோமானியர்) மிகவும் விரும்பியதால் மிளகு 'யவனப்பிரியா' எனப்பட்டது.

**32. (D) போராளிகள்**

'படை' என்பது சேனை; படையாட்சியர் போர்த்தொழில் செய்த வீரர் வகுப்பினர்.

**33. (C) 3 4 1 2**

குறிஞ்சி – புலி, பாலை – நரி/செந்நாய், முல்லை – ஆடு, மருதம் – எருமை.

**34. (D) வெற்பன்**

வெற்பன் என்பது மலைநிலமான குறிஞ்சியின் தலைவனைக் குறிக்கும்; முல்லைத் தலைவன் அல்லன்.

**35. (D) அடிமை விற்பனை விலை ஆவணம்**

'ஆள்விலைப் பிரமாண இசைவுத் தீட்டு' என்பது ஆட்களை (அடிமைகளை) விற்ற விற்பனை ஆவணம்.

**36. (A) (i) மட்டும்**

இளஞ்சேட்சென்னி ஒரு சோழ மன்னன்; செங்குட்டுவன் சேர மன்னன் – எனவே இந்த இணை தவறு. மற்றவை சரியானவை.

**37. (D) [A] மற்றும் [R] இவை இரண்டும் உண்மையானது ஆனால் [R] என்பது [A]யின் சரியான விளக்கம் அல்ல**

சங்க அரசர்கள் புலவர்களை ஆதரித்தது உண்மை; அவைக்கு மன்றம், அவை போன்ற பெயர்கள் இருந்ததும் உண்மை; ஆனால் அப்பெயர்கள் ஆதரவுக்கான காரணம் அல்ல.

**38. (C) வீடு**

இந்திரா ஆவாஸ் யோஜனா (IAY) ஏழைகளுக்கு வீடு கட்டித் தரும் திட்டம்.

**39. (C) பாண்டியர்கள்**

மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டிய மன்னர்கள் சங்கங்களை நிறுவி, சங்கப் புலவர்களையும் இலக்கியங்களையும் ஆதரித்தனர்.

**40. (B) பட்டினப்பாலை**

கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றிய பட்டினப்பாலை கரிகால் சோழனின் ஆட்சியையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் விரிவாகக் கூறுகிறது.

**41. (D) பல்லவர் காலம்**

பல்லவர் காலச் செப்பேடுகளில் ஏர், நிவர்த்தனம், பட்டிகை போன்ற நில அளவை முறைகள் குறிப்பிடப்படுகின்றன.

**42. (C) முல்லை**

முல்லைத் திணையின் உரிப்பொருள் 'இருத்தல்' (கணவனுக்காகப் பொறுமையுடன் காத்திருத்தல்) என்பதால் முல்லை மலர் கற்பின் அடையாளமாகக் கருதப்படுகிறது; 'முல்லைசான்ற கற்பு' என்பது இலக்கிய வழக்கு.

**43. (B) (ii) மற்றும் (iii) மட்டும்**

காவிரிப்பூம்பட்டினம் 'புகார்' என அழைக்கப்பட்டது; அனுராதபுரம் இலங்கை நகரம். அல்லங்காடி (மாலைச் சந்தை), நாளங்காடி (பகல் சந்தை) இருந்தன; யவனர்கள் தமிழருடன் வணிகம் செய்தனர்.

**44. (A) அகநானூறு**

பசும்பூண் பாண்டியனின் யானைகளின் மீது வெண்கொடி பறந்த செய்தி அகநானூற்றுப் பாடலில் இடம்பெறுகிறது.

**45. (B) 1 2 3 4**

பனாஜி சுற்றுலா/பொழுதுபோக்கு நகரம், புது டெல்லி நிர்வாகத் தலைநகரம், ஜாம்ஷெட்பூர் இரும்பு-எஃகுத் தொழில் நகரம், மதுரை கோயில் நகரம்.

**46. (B) [A] சரி ஆனால் [R] தவறு**

ஐந்திணைகளில் பாலையும் மக்கள் வாழ்ந்த நிலப்பகுதியாகும்; ஆனால் பாலை மக்கள் (எயினர், மறவர்) ஆறலை கள்வராக வழிப்பறி செய்து வாழ்ந்தனர், விலங்குகளை வளர்க்கவில்லை.

**47. (B) பையம்பள்ளி**

வேலூர் மாவட்டம் பையம்பள்ளி தமிழ்நாட்டின் முக்கியப் புதிய கற்கால இடமாகும்; கொடுமணல், ஆதிச்சநல்லூர் இரும்புக்கால இடங்கள்.

**48. (C) (i) மற்றும் (ii)**

தமிழின் வாய்மொழி மரபு, பாண் (பாடல்/இசை) மரபாகவும், அதைப் பாடிப் பரப்பிய பாணர் மரபாகவும் அமைந்துள்ளது.

**49. (D) மேற்கூறிய அனைத்தும்**

சோழர் கல்வெட்டுகள் எண்ணாயிரம், திருபுவனம், திருமுக்கூடல், திருவொற்றியூர் ஆகிய இடங்களில் இருந்த கல்லூரிகள் (சாலைகள்) பற்றிக் கூறுகின்றன.

**50. (D) (iv) மட்டும்**

நெய்தலின் உரிப்பொருள் 'இரங்கல்'; 'பிரிதல்' பாலைத் திணைக்கு உரியது.

**51. (B) மயில் தோகை, யானைத் தந்தம், வாசனைப் பொருட்கள்**

விவிலியக் குறிப்புகளின்படி சாலமன் மன்னனுக்குத் தமிழகத்திலிருந்து மயில் தோகை, யானைத் தந்தம், வாசனைப் பொருட்கள் (சந்தனம்) கப்பல்களில் அனுப்பப்பட்டன.

**52. (C) வணிகர் சங்கங்கள்**

ஐநூற்றுவர் (ஐஹொளே ஐநூற்றுவர்) என்பது தென்னிந்தியாவின் புகழ்பெற்ற வணிகர் சங்கம் ஆகும்.

**53.** **(B) 4 1 3 2**

குறிஞ்சி மக்கள் வேட்டையாடினர், பாலை மக்கள் சூறையாடினர், முல்லையில் ஏறுதழுவல் நடந்தது, மருத மக்கள் களையெடுத்து வேளாண்மை செய்தனர்.

**54.** **(C) முசிறி**

மூத்த பிளினி தனது 'இயற்கை வரலாறு' நூலில் சேரர் துறைமுகமான முசிறியை 'இந்தியாவின் முதல் பேரங்காடி' என்று குறிப்பிடுகிறார்.

**55.** **(A) அதியமான்**

ஜம்பைக் கல்வெட்டில் அதியமான் 'சதியபுதோ' என்று அழைக்கப்படுவதால், அசோகர் கல்வெட்டின் சத்யபுத்ரர் அதியமான் மரபினர் என அடையாளம் காணப்படுகின்றனர்.

**56.** **(B) (b) மட்டும்**

இறையனார் அகப்பொருள் உரையின்படி மதுரையில் நடந்த மூன்றாம் (கடைச்) சங்கத்தின் தலைமைப் புலவர் நக்கீரர்.

**57.** **(A) மதுரை**

மதுரையைச் சுற்றியுள்ள மலைகளில் சமணப் பள்ளிகள் இருந்தன; வஜ்ரநந்தி கி.பி. 470-இல் மதுரையில் திராவிட சங்கத்தை நிறுவினார்.

**58.** **(B) 3 1 4 2**

பாண்டியர் 'செழியன்', சேரர் 'ஆதவன்', சோழர் 'செம்பியன்', ஆய் மன்னர் 'திதியன்' என்ற பட்டங்களைப் பெற்றனர். எனவே விடை 3 1 4 2.

**59.** **(B) செங்குட்டுவன்**

சேர மன்னன் செங்குட்டுவன் இமயத்திலிருந்து கல் கொணர்ந்து கண்ணகிக்குக் கோயில் எழுப்பி பத்தினி வழிபாட்டைத் தொடங்கினான் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

**60.** **(D) மேற்கூறிய அனைத்தும்**

முதலாம் பராந்தக சோழன் காலத்து உத்திரமேரூர் கல்வெட்டுகள் குடவோலை முறைத் தேர்தல், சபை, வாரியங்கள் உள்ளிட்ட கிராம நிர்வாகத்தை எழுதப்பட்ட விதிகளாக விவரிக்கின்றன.

**61.** **(B) மல்லபாடி**

கிருஷ்ணகிரி மாவட்டம் மல்லபாடியில் 1978-இல் கண்டறியப்பட்ட பாறை ஓவியங்களே தமிழ்நாட்டில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டவை.

**62.** **(C) (1), (3), (2), (4)**

சிறியதிலிருந்து பெரியது வரை: ஊர் → கூற்றம் → நாடு → மண்டலம். பல ஊர்கள் சேர்ந்தது கூற்றம்; பல நாடுகள் சேர்ந்தது மண்டலம்.

**63.** **(B) 2 4 1 3**

மெகஸ்தனிஸ் கிரேக்கர் (இண்டிகா), அபே டுபோயிஸ் பிரெஞ்சு மிஷனரி, பாகியான் சீனப் பயணி; ரோமப் பேரரசுக் காலத்து புவியியலாளர் ஸ்ட்ராபோ ரோமப் பயணியாகப் பொருத்தப்படுகிறார். விடை 2 4 1 3.

**64.** **(D) கூடலூர் ஆகோளில் மரணமடைந்த பேடு தீய குலம் சார்ந்த அந்தவனுக்கு எடுக்கப்பட்ட கல்**

'ஆகோள்' என்பது ஆநிரை கவர்தல் போர். கூடலூர் ஆநிரைப் போரில் உயிர் நீத்த பேடு தீயன் அந்தவனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் என்பதே பொருள்.

**65.** **(B) 1, 4, 3, 2**

வேள்விக்குடிச் செப்பேடு (நெடுஞ்சடையன் பராந்தகன், 8ஆம் நூ.) முதலில், அதன்பின் ஸ்ரீவரமங்கலம், பின் சின்னமனூர் (ராஜசிம்மன், 10ஆம் நூ. தொடக்கம்), இறுதியாக சிவகாசி (வீரபாண்டியன், 10ஆம் நூ. நடுப்பகுதி).

**66.** **(C) 1 மற்றும் 3 மட்டும்**

முல்லை என்பது காடும் காடு சார்ந்த நிலம்; அங்கு ஆயர்கள் ஆநிரை மேய்த்தனர். அதன் தெய்வம் மாயோன் (திருமால்); இந்திரன் மருத நிலத் தெய்வம்.

**67.** **(B) 3 4 1 2**

முல்லைக்கு மாயோன், மருதத்திற்கு வேந்தன் (இந்திரன்), நெய்தலுக்கு வருணன், பாலைக்கு கொற்றவை தெய்வங்கள். விடை 3 4 1 2.

**68.** **(B) காஞ்சி**

"கல்வியில் கரையிலாத காஞ்சி மாநகர்" என்று திருநாவுக்கரசர் (அப்பர்) காஞ்சிபுரத்தைப் போற்றினார்; அது பல்லவர் காலக் கல்வி மையம்.

**69.** **(A) நெடுஞ்செழியன்**

மதுரை அருகே மாங்குளம் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் சமணத் துறவிகளுக்குக் கற்படுக்கைகள் அமைத்துக் கொடுத்ததைக் குறிப்பிடுகின்றன.

**70.** **(B) [A] மற்றும் [R] ஆகிய இரண்டும் சரி, ஆனால் [A] சரி என்பதற்கு [R] சரியான விளக்கமல்ல**

சங்கப் புலவர்களில் பலர் வணிகம், மருத்துவம் போன்ற தொழில் செய்தவர்கள்; சிலரே பரிசிலை நம்பி வாழ்ந்தனர். பரிசிலர் தகுதிக்குறைவான பரிசை மறுத்ததும் உண்மையே; ஆனால் அது கூற்றை விளக்கவில்லை.

**71.** **(D) 3 மற்றும் 4 தவறானவை**

சிலப்பதிகாரம் கூறும் மதுரைக் கோட்டைப் பொறிகளில் ஐயவித்துலாம் என்பது பகைவரைத் தாக்கும் துலாமரப் பொறி; எறிசிரல் என்பது பகைவர் கண்ணைக் கொத்தும் சிரல் (மீன்கொத்தி) வடிவப் பொறி. எனவே 3, 4 தவறான இணைகள்.

**72.** **(B) 3 2 4 1**

மாயோன் (திருமால்) முல்லை, சேயோன் (முருகன்) குறிஞ்சி, வேந்தன் (இந்திரன்) மருதம், வருணன் நெய்தல் நிலத்தின் தெய்வங்கள்.

**73.** **(D) (1), (2), (5)**

குறிஞ்சிக்குக் கிளி, மயில்; முல்லைக்குக் காட்டுக்கோழி; பாலைக்குப் புறா, பருந்து ஆகியவை பறவைகள். மருதத்துக்கு நாரை, அன்னம்; நெய்தலுக்குக் கடற்காகம் ஆகியவை பறவைகள் என்பதால் (3), (4) தவறு.

**74.** **(B) (4) (3) (2) (1)**

பெருங்கற்காலம் கி.மு. 1300–300, பிராமி எழுத்து அறிமுகம் கி.மு. 400–300, சங்க காலம் கி.மு. 300–கி.பி. 300, சங்கம் மருவிய காலம் கி.பி. 300–500 எனத் தமிழகப் பாடநூல் வரையறுக்கிறது.

**75.** **(B) (3) (1) (5) (2)**

கிழவன் என்பது ஊர்த் தலைவர்; ஆசுடையான் நில உரிமையாளர்; நாயகம் படைப் பிரிவின் தலைவன்; அரையான் வழிநடத்தும் தலைவன் ஆவான்.

**76.** **(C) (2) மற்றும் (3) சரியானவை**

திப்பு சுல்தானின் சின்னம் புலி; சோழர்களின் கொடிச் சின்னமும் புலி. பாண்டியர்களின் சின்னம் மீன் (கயல்), சிங்கம் அல்ல.

**77.** **(A) காந்தர்வம்**

காந்தர்வ மணம் என்பது பெற்றோர் சம்மதமின்றி ஆணும் பெண்ணும் தாமே விரும்பி மணப்பது; தமிழின் களவு மணத்துடன் ஒப்பிடப்படுகிறது.

**78.** **(C) 3 4 2 1**

நல்லியக்கோடன் திண்டிவனம் பகுதியையும், அதியமான் தகடூரையும் (தருமபுரி), மலையமான் திருமுடிக்காரி திருக்கோவிலூரையும், நன்னன் செங்கம் பகுதியையும் ஆண்டனர்.

**79.** **(C) [A] மற்றும் [R] இரண்டும் சரி மற்றும் [R] என்பது [A]ன் சரியான விளக்கம்**

2025-இல் வெளியான 'இரும்பின் தொன்மை' அறிக்கையின்படி சிவகளை உள்ளிட்ட இடங்களில் கிடைத்த இரும்புப் பொருட்கள் கி.மு. 3345 வரை காலமிடப்பட்டன; இதுவே கி.மு. 4-ஆம் ஆயிரமாண்டிலேயே தமிழர் இரும்பை அறிந்திருந்தனர் என்பதற்கான சான்று.

**80.** **(C) (1), (3), (4), (2)**

வரலாற்றுக்கு முற்பட்ட காலம், சங்க காலம் (கி.மு. 300–கி.பி. 300), பல்லவர் காலம் (கி.பி. 6–9 நூ.), பிற்காலச் சோழர் காலம் (கி.பி. 9–13 நூ.) என்பதே சரியான வரிசை.

**81.** **(B) (1) மற்றும் (4) மட்டும்**

சேரர்களின் தலைநகர் வஞ்சி, துறைமுகம் தொண்டி. மதுரை–கொற்கை பாண்டியருக்கும், உறையூர்–பூம்புகார் சோழருக்கும் உரியவை என்பதால் (2), (3) தவறு; நீக்கல் முறையில் (1), (4) சரி.